ௐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

**வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்**

**(பதிவு எண்: 226 / 1992)**




**சத்திரப்பட்டி சாலை,**
**வேதபுரீ, தேனி. - 625 531**






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்

நாள் :
03, மாசி 2026

Date:
15, Febuary 2026



வகுப்பு 25

www.vedaneri.org

## அறத்துப்பால் - இல்லறவியல் அதிகாரம் : 18

# வெஃகாமை

## (பிறர் பொருளை அபகரிப்பதற்கு நினையாமை)

- பிறருக்கு உரிமையான பொருள்களை தமக்குரிமையாக்கிக் கொள்ளக் கருதுதல் இல்லாமை.
- வெஃகுதல் = (பிறர் பொருளை) விரும்புதல். அஃது இல்லாமை வெஃகாமை.
- தம்மிடமில்லாமல் பிறரிடமுள்ள பொருளைப் பார்த்துப் பொறாமை ஏற்படுவது போல, அதனை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணமும் ஏற்படலாம் என்பதால் அதுவும் குற்றமென்று உணர்த்துதற்காக அழுக்காறாமையின் பின் வைக்கப்பட்டது.



**குறள்: 1 - 7 வெஃகுதலால் உண்டாகும் குற்றம்**

1. குடியைக் கெடுக்கும். பல குற்றங்கள் வரும்.
2. நடுவுநிலைமை தவறும்.
3. நிலையில்லாத இன்பம்
4. வறுமை வரும். (அறிவுடையார் வறுமையிலும் வெஃகமாட்டார்)
5. அறிவினால் பயனில்லை.
6. இரண்டறத்தையும் இழப்பான்.
7. நன்மையுண்டாகாது.

**குறள்: 8, 9 வெஃகுதல் இல்லாமையினால் உண்டாகும் நன்மை**

1. செல்வம் குறையாது.
2. செல்வம் பெருகும். (லக்ஷ்மிதேவி தேடி வருவாள்)

**குறள்: 10 - குற்றமும் குணமும்**

அழிவு - வெற்றி

# 1. நடுவின்றி நன்பொருள் வெஃகில் குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்.

நடுவுநிலைமை இல்லாமல் (பிறரது) நல்லபொருளை ஒருவன் தமக்கென எடுத்துக்கொள்ள விரும்புவானென்றால் (அவ்விருப்பம் அவனது) குலத்தைக் கெடச் செய்து பல குற்றங்களையும் அப்பொழுதே கொடுக்கும்.

நடுவின்றி = நடுவு இன்றி = பிறர்க்குரிய பொருளை திருடக் கருதுதல் நமக்கு அறமல்ல என்னும் நடுவுநிலைமை இல்லாமல்.
நன்பொருள் = நல்ல பொருள் = குடியை வளரச் செய்து பல நன்மைகளையும் உண்டாக்கும் பொருள்.
பொன்றி = பொன்ற என்பது பொன்றி எனத் திரிந்து நின்றது. அல்லது பொன்றுவித்து என்பதன் விகாரம். பொன்றச் செய்து என்பது பொருள்.

பிறர் பொருளை விரும்புதல் அவனது குலத்தை அழித்து பல குற்றத்தையும் கொடுக்கும்.



## 2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
## நடுவன்மை நாணு பவர்.

நடுவுநிலைமை இல்லாமல் போவதற்கு அஞ்சுபவர் பிறர்பொருளை அபகரித்தலால் தமக்கு வரும் பயனை விரும்பி பழிச்செயல்களைச் செய்ய மாட்டார்.

படுபயன் = தமக்குக் கிடைக்கும் பயன்.
பழிப்படுவ = பழியில் கொண்டு சேர்க்கும் குற்றச்செயல்கள்.
நடுவன்மை = நடுவு அன்மை = நடுவுநிற்றல் இன்மை. நடுவு = நீதி.
நாணுபவர் = அஞ்சுபவர்.

பலன் கருதி பழிச்செயல்களைச் செய்யமாட்டார் நடுவுநிலைமை தவறுவற்கு அஞ்சுபவர்.



# 3. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

நிலையான இன்பத்தை விரும்புபவர் நிலையில்லாத இன்பத்தை விரும்பி அறமல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்.


சிற்றின்பம் = சிறிய இன்பம் = நிலையில்லாத இன்பம்.
மற்ற இன்பம் = மற்றைய இன்பம் = சிற்றின்பத்திற்கு வேறான நிலைத்த இன்பம்.

பிறர்பொருளை அடைந்து அடையும் இன்பம் பாபத்தின் பயனாக வருதலால் விரைவில் அழியும் என்பதால் சிற்றின்பம் என்றார். அறத்தின் பயனாக வரும் இன்பம் நீண்ட காலம் இருக்கும் என்பதால் நிலைத்த (நீடித்த) இன்பம் எனும் பொருளில் மற்றின்பம் என்றார்.

நிலைத்த இன்பத்தை விரும்புபவர் விரைவில் சிற்றின்பத்தை விரும்பி அறமல்லாத செயல்களைச் செய்யமாட்டார்.



# 4. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற புன்மையில் காட்சி யவர்.



ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத அறிவினையுடையவர் யாம் வறியவன் என்று நினைத்து (அவ்வறுமையைப் போக்குதற்காக) பிறர்பொருளை விரும்ப மாட்டார்.

புலம் = ஐம்புலன்கள் - ஞான இந்த்ரியங்கள்.
வெல்லுதல் = பாபநெறியில் செல்லவிடாமை.
புன்மையில் காட்சியவர் = பிறழ்சி - திரிபு - இன்றி உள்ளதை உள்ளவாறு கண்டவர். நித்ய அநித்ய விவேகம் உள்ளவர்.

ஐம்புலன்களையும் வென்ற தெளிந்த அறிவுடையவர்களுக்கு வறுமையில்லாமையால் அவர் பிறர்பொருளை விரும்புவது இல்லை. அப்படியே புறத்தில் வறுமை இருந்தாலும் அகத்தில் அவர் நிறைவுடையவராகவே இருப்பர். ஆகையால் புறவறுமை வறுமையாகத் தெரியாது.

ஐம்புலன்களையும் வென்ற அறிஞர் நான் வறியவன் என்று கருதி பிறர் பொருளை விரும்பமாட்டார்.

## 5. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
## வெஃகி வெறிய செயின்.




பிறர் பொருள் விரும்பி யாரிடத்திலும் மயக்கத்தினால் அறிவோடு பொருந்தாத செயல்களை அறிவுடையவர் செய்தாரென்றால் நுட்பமானதாகி பல்நூல்களையும் பயின்றறிந்த அறிவினால் என்ன பயனாம்?

அஃகி = நுட்பமானதாகி,
அகன்ற = பலநூல்களையும் கற்று விரிவடைந்திருக்கின்ற,
அறிவு என்னாம் = அறிவிருப்பதனால் என்ன பயனாகும்?
யார் மாட்டும் = தகுதியுடையவர், தகுதியில்லாதவர் அனைவரிடத்திலும்
வெறிய செயல் = இழிவான பிறருக்குத் துன்பம் தரும் செயல்கள்

அறிவுக்குப் பயன் அறனறிந்து இழிந்த செயல்களைச் செய்யாமையாகும். மோஹத்தினால் தகாத செயல்களைச் செய்தால் அவ்வறிவுக்குப் பயனில்லை என்பதாம்.

## 6. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப் பொல்லாத சூழக் கெடும்.



அருளாகிய அறத்தை (இறுதி இலக்கான துறவறத்தை) விரும்பி (அத்துறவறத்திற்கு) வழியாகிய இல்லறத்தில் இருப்பவன், பிறர் பொருளை விரும்பி தவறான வழிகளை எண்ணக் கெடுவான்.


அருள் வெஃகி = அருளை விரும்பி = துறவு வாழ்வின் அறமாகிய அருளை காலக்கிரமத்தில் அடைய விரும்பி
ஆறு = வழி - துறவு வாழ்வுக்கு வழியான இல்லறம்
பொல்லாத = தீயன - அறமல்லாதன
சூழக் கெடும் = சித்திக்கக் கெட்டுப்போவான்.
கெடுதல் = இல்லறமும் துறவறமும் கெடுதல்.

இல்லத்திலிருந்து அதற்குரிய அறத்தைக் கடைபிடித்து பக்குவப்படாமல் துறவறம் கூடாதாகையால் இல்லறத்தை துறவறத்திற்கு ஆறு (வழி) என்றார்.

பொல்லாதவற்றை எண்ணியவளவாலே கெடும் என்றதனால், செய்தால் கெடுதல் சொல்லாமலே பெறப்பட்டது.

பிறவாநிலையெனும் பரமபுருஷார்த்தத்தை லக்ஷ்யமாகக் கொண்ட ஜீவன், அதற்கு ஸாதனமான துறவு மனப்பான்மையைப்பெற இல்லறத்தை அறவழியில் நடத்த வேண்டும்.

ஆசையினால் பிறர் பொருளை விரும்பினால் இரண்டறத்தையும் இழந்து விடுவான் என்பது கருத்து.



# 7. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
# மாண்டற் கரிதாம் பயன்.



பிறர்பொருளை விரும்பி அப்பொருளால் தமக்கு உண்டாகும் செல்வத்தின் பெருக்கத்தை விரும்பற்க. (ஏனெனில்) பின் அனுபவிக்கும்போது அச்செல்வத்தின் பயன் நன்மையாக அமைவதில்லை.

பெருக்கம் = மேலும் மேலும் பெருகுதல்
மாண்டற்கு அரிதாம் = மேன்மை உண்டாவதற்கு - நன்மையாதலுக்கு - அரிதாகும்.

பிறர்பொருளை அபகரித்து அனுபவிப்பவனுக்கு மேன்மை உண்டாவது இல்லை.

இவ்வேழு பாட்டாலும் பிறர் பொருளை விரும்புவதால் வரும் குற்றம் சொல்லப்பட்டது.

# 8. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்.

குறைந்துபோகும் தன்மை உடையதாகிய செல்வத்திற்கு குறைந்து போகாதிருக்கக் காரணம் யாதென்று ஒருவன் ஆராய்ந்தால் பிறன் விரும்பும் பொருளை தான் விரும்பாது இருத்தலாகும்.

அஃகாமை = குறைந்து போகாமை.
பிறன் வேண்டும் கைப்பொருள் = பிறர் தமக்கு வேண்டும் என்று விரும்பி சேர்த்து வைத்திருக்கும் பொருள்.

பிறன் பொருளை விரும்பாதவனுடைய செல்வம் குறையாது இருக்கும்.



## 9. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
## திறனறிந்து ஆங்கே திரு.

இதுவே அறமென்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையவரை திருமகள் தான் சென்று சேரும் வழியை அறிந்து அப்படியே சென்றடைவாள்.

சேரும் திறம் = காலம், இடம் போன்றவை.
திரு = திருமகள் = பெருஞ்செல்வம்.

பிறர்பொருளை விரும்பாத அறிவுடையவரை லக்ஷ்மிதேவி தானே சென்றடைவாள்.

இவையிரண்டு பாட்டாலும் வெஃகாமையின் குணம் - நன்மை - கூறப்பட்டது.



# 10. இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும் வேண்டாமை என்னும் செருக்கு.

ஒருவன் பின்விளைவினை அறியாமல் பிறர் பொருளை அடைய விரும்பினால் அது அவனுக்கு அழிவைத்தரும். விரும்பாமை எனும் செல்வமானது வெற்றியைத் தரும்.

**இறல்** = கெடுதல், அழிதல்
**விறல்** = வெற்றி
**செருக்கு** = செல்வம். செருக்கு உண்டாவதற்குக் காரணமான செல்வத்தைக் குறிக்கிறது. கார்யவாகுபெயர்.

பகையையும் பாவத்தையும் பெருகச் செய்து அழிவை உண்டுபண்ணும் என்பதால் இறல் ஈனும் எனப்பட்டது.



பொருள் வேண்டி அலைவோர் யாவரையும் கீழாகச் செய்வதால் வேண்டாமை விறல் - வெற்றி - ஈனும் எனப்பட்டது.

பிறர்பொருளை விரும்புவோர்க்கு அழிவும் விரும்பாதவர்க்கு வெற்றியும் உண்டாகும் என்பது கருத்து.

இவ்வொரு பாட்டால் வெஃகுதலால் உண்டாகும் குற்றமும் வெஃகுதல் இல்லாமையினால் உண்டாகும் நன்மையும் ஒருங்கே கூறப்பட்டது.

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி

வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்

உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே

வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

    Swami Omkarananda

    Vedapuri Events

    Swami Purnananda Tamil

2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam


94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com